பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 185

சனிக்கிழமை
31 மே 2025

வைகாசி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

யாழ். மாவட்டத்தில்

## ரூ.200 மில்லியனில் சுகாதாரத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 31
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 200 மில்லியன் ரூபா செலவில் சுகாதாரச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் ☞ 11

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில்

## குளவிக்கொட்டுக்கு இலக்காகி 78 மாணவர்கள் பாதிப்பு!

முல்லைத்தீவு, மே 31
முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 78 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய, பாடசாலைக் கட்டடத் தொகுதியிலிருந்த பப்பரக்கொப்பான் எனும் குளவிக்கூடு, தற்போது வீசி வரும் கடுமையானகாற்றால் ☞ 11



தமிழரசு - பேரவையிடையே

# ஆட்சிக்கு இணக்கம்; பேச்சுத் தோல்வியாம்

யாழ்ப்பாணம், மே 31
இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ்த் தேசியப் பேரவைக்கும் இடையில், உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பதில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. ஆனால், கொள்கையளவில் இணைந்து செயற்படுவது குறித்து இந்தப் பேச்சுத் தோல்வியடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ☞ 11

## மத்திய அரசின் கட்டுப்பாட்டில் மன்னார் பொதுமருத்துவமனை!

தனியொருவராக எதிர்த்த ரவிகரன் எம்.பி.



மன்னார், மே 31
மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான அனுமதியை வழங்கும் வகையிலான தீர்மானமொன்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் ☞ 11

## இளைஞர் சடலமாக மீட்பு!

கொடிகாமம், மே 31
கொடிகாமத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ள நிலையில், இறப்பு விசாரணைகளை ☞ 11

இந்திய அகதிமுகாமிலிருந்து

## தாயகம் திரும்பிய முதியவருக்கு மறியல்!



கொழும்பு, மே 31
போர்க்காலத்தில் இலங்கையில் இருந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்று, கிட்டத்தட்ட 37 ஆண்டுகளுக்குப் பின்னர் தாயகம் திரும்பிய முதியவரொருவர் பலாலி விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். ☞ 11

## 3 சத்திர சிகிச்சைகள்; மாத சிசு உயிரிழப்பு

சங்கானையில் சோகம்

யாழ்ப்பாணம், மே 31
வயிற்றில் ஏற்பட்ட கட்டி காரணமாக மூன்று தடவை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட மூன்று மாத பெண் குழந்தை ஒன்று பித்தப்பையில் கிருமித்தொற்று ஏற்பட்டு உயிரிழந்துள்ள சம்பவம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளது.
சங்கானைப் பகுதியைச் சேர்ந்த திகாசன் ☞ 11

## தெல்லிப்பழை மருத்துவமனையிலுள்ள புற்றுநோய்ப் பிரிவை தனிப்பிரிவாக்குக

கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து



யாழ்ப்பாணம், மே 31
வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் விசேட தனிப் பிரிவாக தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய்ப்பிரிவு தரமுயர்த்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார். ☞ 11

சாவகச்சேரியில் எதிர்காலத்தில்

## மனிதர்களை விடவும் குரங்குகள் அதிகரிக்கும்

ஒருங்கிணைப்புக்குழுவில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே 31
யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் மனிதர்களைவிட குரங்குகள் பெருகும் அபாயம் உருவாகியுள்ளது. இதனால் எங்களுடைய விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு பொருளாதார ரீதியாக நலிவடையும் சூழல் ஏற்பட்டுள்ளது - இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் ☞ 11

கலாசார மண்டபத்துக்கு அருகாகவுள்ள

## புல்லுக்குளம் வீதியை பாவனைக்கு விடுங்கள்

இளங்குமரன் எம்.பி. வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 31
யாழ். கலாசார மண்டபத்துக்கு அருகாகவுள்ள புல்லுக்குளம் வீதியை உடனடி யாகத் திறக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வலியுறுத்தியுள்ளார்.
நேற்று நடைபெற்ற யாழ்ப் ☞ 11

### முச்சந்தி முரளி

‘ஒப்பிரேசன் வெற்றி, பேண்ட் செத்திட்டார் எண்ட கதைமாதிரித்தான் உவையின்ர பேச்சு’

## மோசமான காலநிலையால் 1,757 பேருக்குப் பாதிப்பு!

கொழும்பு, மே 31
இலங்கையில் நிலவும் மோசமான காலநிலை காரணமாக, 485 குடும்பங்களைச் சேர்ந்த 1,757 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ ☞ 11

## தவறான முடிவெடுத்து குடும்பத்தலைவர் சாவு

யாழ்ப்பாணம், மே 31
வடமராட்சி கரவெட்டி பகுதியில் வசித்துவந்த இளம் குடும்பத்தலைவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். ☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4084 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 10 13 25 51 |
| விசேட எழுத்து | M |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1151 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 25 27 40 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0110 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 5 4 4 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2190 |
| ஆங்கில எழுத்து | Y |
| சுப்பர் இலக்கம் | 02 |
| வெற்றி இலக்கங்கள் | 11 30 49 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5842 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 6 6 6 9 8 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1872 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 04 19 45 77 |
| விசேட எழுத்து | I |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 27.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0417 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 6 9 8 8 |

# "வாங்கோ வாங்கோ" என அழைத்து அடைக்கின்றீர்கள் சிறையில்!

## அரசின் ஜனநாயகப்பண்பு இதுவா? மனோகணேசன் எம்.பி. காட்டம்

**கொழும்பு, மே 31**

**தமிழக முகாமில் முப்பது வருடங்களுக்குமேல் வாழ்ந்து, வயோதிபம் அடைந்து, உங்களை நம்பி, நாடு திரும்பிய, 75 வயதான சின்னையா சிவலோகநாதனை விமான நிலையத்தில், எதற்காக கைதுசெய்தீர்கள்? "வாங்கோ, வாங்கோ" என நீங்கள்தானே வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கிறீர்கள்? உங்களை நம்பி திரும்பி வந்தால் விமான நிலையத்தில் கைதுசெய்கிறீர்கள். இதுதான் ஜனநாயகமா?**

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழக முகாமில் முப்பது வருடங்களுக்குமேல் வாழ்ந்து, வயோதிபம் அடைந்து, உங்களை நம்பி, நாடு திரும்பிய, 75 வயதான சின்னையா சிவலோகநாதன் பலாலி விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஐ.நா. அகதிகள் ஆணைக்குழு, சிவலோகநாதனுக்கு பயண சீட்டு வாங்கிக் கொடுத்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, விமான மேற்றி அனுப்பி வைத்துள்ளது.

பின் எதற்காக இந்தக் கைது? வெளிநாடு சென்ற தமிழர்களை திரும்பி "வாங்கோ, வாங்கோ" என நீங்கள் தானே வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கிறீர்கள்? உங்களை நம்பி வந்தால் விமானநிலையத்தில் கைது செய்வதா ஜனநாயகப் பண்பு? - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 27.05.2025 | செவ்வாய்க்கிழமை | 0550 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| D | 1 1 8 0 0 4 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.05.2025 | செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2816 | P | 04 43 55 79 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.05.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 40 41 73 76 | 4977 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 27.05.2025 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0691 | 07 34 39 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.05.2025 | செவ்வாய்க்கிழமை | |
| விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♏ | 05 16 29 58 | 4528 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 27.05.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| F | 28 | 21 27 50 63 | 1992 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 27.05.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| N | 10 20 31 34 | 2642 |



# புதிய தோற்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மே 31

ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் புதிய தோற்றத்தைப் பெறும் என்றும், புதிய முகங்கள் சில பதவிகளில் நியமிக்கப்படுவர் என்றும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான பரப்புரை ஒரு குழுவால் கையாளப்பட்டது. இந்தக் குழுவில் துணைத்தலைவர் ருவான் விஜேவர்த்தன, உதவித் தலைவர் அகிலவிராஜ் காரியவசம், தலைவர் வஜிர அபேவர்த்தன, துணைத் தலைவர் நவீன் திசாநாயக்க மற்றும் பொதுச்செயலாளர் தலதா அத்துகோரல ஆகியோர் உள்ளனர். ஐ.தே.க.வை மறுசீரமைக்கும் பணியை இந்தக் குழுவிடம் ஒப்படைத்துள்ளேன்- என்றார். (எ-இ)

# மாநகரசபை ஆட்சிக்கு "பார் பெர்மிட்" இலஞ்சம்

## விமல் கூறுகின்றார்

கொழும்பு, மே 31

கொழும்பு மாநகரசபையில் ஆட்சியைப் பிடிப்பதற்காக அரசாங்கத்தின் சார்பில் பணம் செலவழித்துச் செயற்படும் பணக்காரர்களுக்கு மது விற்பனை நிலைய அனுமதி வழங்கப்படவுள்ளது என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சில சபைகளில் அரசுக்கு 50 வீதம் கிடைத்துள்ளது. சில சபைகளில் 50 வீதம் இல்லை. பெரும்பான்மை மட்டும் கிடைத்துள்ளது. 50 வீதம் இல்லாமல் பெரும்பான்மை கிடைத்திருக்கும் சபைகளில் ஏனைய சிறுசிறு கட்சிகள் ஒன்றுசேர்ந்தால் ஆட்சியமைக்கமுடியும். அதற்கு சட்டத்தில் இடமுண்டு. ஆனால் அவ்வாறு ஆட்சி அமைக்க விடாமல் அரசு மிரட்டல் விடுக்கிறது. இதுதான் அவர்களது ஜனநாயகமா? அரசுக்குத் தேவை என்றால் அரசால் பிழையும் சரியாகப் பார்க்கப்படுகிறது. இது தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காகத் தகவல்களைத் திரட்டுகின்றோம் - என்றார். (எ-75)



# அரசாங்க ஆதரவாளர்களுக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவிகள்

## குற்றஞ்சாட்டுகின்றார் ஹர்சன எம்.பி.

கொழும்பு, மே 31

கடந்த தேர்தலில் அரசாங்கத்துக்கு உதவி செய்தவர்கள், தேர்தலில் அரச சார்பில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்கள் போன்றவர்களுக்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் பதவி வழங்கப்படுகிறது என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சனராஜகருணா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த அரசாங்கம் எதிர்க்கட்சியாக இருந்தபோதுபிழையானஅரசியல்நியமனங்களை எதிர்த்தது. ஆனால் இந்த அரசிலும் அவ்வாறான நியமனங்கள்தான் இடம்பெறுகின்றன . தேர்தலில் அரசாங்கத்துக்கு உதவி செய்தவர்கள், தேர்தலில் அரச சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்கள் போன்றவர்களுக்கே வெளிநாட்டுத் தூதுவர்கள் பதவி வழங்கப்படுகிறது.

அரச சொத்துகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது தொடர்பில் அன்று வாய் கிழியப் பேசிய இந்த அரசு அதே துஷ்பிரயோகத்தை இப்போது செய்கிறது. உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற அவர்களின் உறுப்பினர்களை அலரிமாளிகைக்கு அழைத்துவந்து கூட்டம் நடத்துகிறது. இதன் மூலம் அரச சொத்து துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது - என்றார். (எ-75)

# 29,015 மின்தடை

கொழும்பு, மே 31

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் 29,015 மின் தடைகள் பதிவாகியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடும் காற்று மற்றும் மழை காரணமாக மரங்கள் முறிந்து விழுந்துள்ள நிலையில், மின்கம்பிகளுக்கு சேதம் ஏற்பட்டு மின்சாரம் துண்டிக்கப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்டத்தில்

# நெற்பயிர்கள் அழிவுக்கு ரூ. 13 மில்லியன் நட்டஈடு

## விவசாயத்திணைக்களக் காப்புறுதி அதிகாரி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 31**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் காரணமாக அழிவடைந்த நெற்பயிர்களுக்கு நட்டஈடாக 13 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என விவசாய திணைக்களக் காப்புறுதி அதிகாரி தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட விவசாயக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மறவன்புலவுப் பகுதியில் நெற்பயிர்கள் அழிவு ஏற்பட்டுள்ளதாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் தமக்கான அழிவுக்குரிய கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை என சாவகச்சேரிப் பிரதேச விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது விவசாயத் திணைக்களக் காப்புறுதி அதிகாரி, யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் காரணமாக அழிவடைந்த நெற்பயிர்களுக்கு நட்டஈடாக 13 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. பிரதேச விவசாய போதனாசிரியர்களினுடையை கள விஜயத்தினூடாக நெல் அழிவுகள் கருத்தில் கொள்ளப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ளாத நெற்பயிர் ஆரம்ப முளையிலேயே அழிந்த விவசாய நிலங்களைக் கொண்ட விவசாயிகளும் இதற்கு விண்ணப்பங்களை மேற்கொண்டுள்ளனர். ஆகவே சீராக ஆராய்ந்து இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்- என்றார். (ச-125)

# வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த யாழில் செயற்றிட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 31



யாழ்.மாவட்டத்தில் தென்னைமரங்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த தென்னை அபிவிருத்திசபையால் செயற்றிட்டமொன்று முன்னெடுக்க யாழ்.மாவட்ட விவசாயக்குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தென்னை அபிவிருத்திச் சபையின் 15 தெளிகருவிகள் மூலம் வேப்பெண்ணெய் தெளித்துக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது. முதற்கட்டமாக சாவகச்சேரிப் பிரதேச செயலகப் பிரிவுகளில் எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரையும் கோப்பாய்ப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 16 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையும், பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 23 ஆம்திகதிதொடக்கம் 29ஆம் திகதிவரையும் சம்பந்தப்பட்ட பிரதேசசெயலாளர்களின் ஒருங்கிணைப்பில் தென்னை அபிவிருத்திசபையின் மேற்பார்வையில் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-66,125)

# யோஷித வழக்கு ஜூலை 11க்கு ஒத்திவைப்பு

யோஷித ராஜபக்ச மற்றும் அவரது பாட்டி டேஸி பொரஸ்ட் ஆகியோருக்கு எதிராகப் பணமோசடி தடுப்புச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஜூலை 11 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கு நேற்று மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தஉத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-இ)

# சாவதற்கு முன்னர் நீதியை வழங்குங்கள்

## காணாமற்போனோரின் உறவுகள் கோரிக்கை

வவுனியா, மே 31

காணாமற்போன உறவுகளுக்கு என்ன நடந்தது என்று அறியாமலே பலர் மரணித்துள்ளனர். எனவே நாங்களும் இறக்கும் முன்னர் எமக்கான நீதி கிடைக்கவேண்டும் என்று வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவித்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா பழையபேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்பாட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

எமக்கான நீதிகோரி நாங்கள் தொடர்ச்சியாகப் போராடிவரும்நிலையில் 300க்கும் மேற்பட்ட உறவுகளை இழந்துள்ளோம். தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலே அவர்கள் இறந்துள்ளனர்.

எனவே மீதமுள்ள சாட்சிகளாக உள்ள நாங்களும் இறக்க முன்பாக எமக்கான நீதியை சர்வதேசம் வழங்கவேண்டும்- என்றனர். (ச-110)



# ஓகஸ்ட் நடுப்பகுதியில் யாழ். பண்பாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணப் பண்பாட்டு விழாவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன், சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். கடந்த புதன்கிழமை இடம்பெற்ற யாழ்.மாவட்டப் பண்பாட்டுப் பேரவைக்கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். கலைஞர்கள் கௌரவிக்கப்படவேண்டும். மாதாந்தம் ஒரு கலை நிகழ்ச்சியாவது நடைபெறுவதற்கு ஒழுங்கமைப்புச் செய்யவேண்டும்.

பண்பாட்டுப்பேரவைக் பொதுக்கூட்டத்தினை எதிர்வரும் ஜூன் மாதம் 28 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும், கூட்டத்தில் அதிகளவான கலைஞர்கள் பங்குபற்றுவதைக் கலாசார உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-25,66)




ஆரெல்லாம் தங்கட கை சுத்தம் எண்டு சொல்லுகினமோ அங்கதான் சிக்கல் இருக்கெண்டு அர்த்தம். திசைகாட்டி அரசாங்கம், தாங்கள் ஆட்சிக்கு வந்த உடன ஊழலை ஒழிப்பம், மோசடியைக் குறைப்பம், அதிகாரத் துஷ்பிரயோகத்தை இல்லாமல் செய்வம் எண்டு முழங்கிக் கொண்டுதான் வந்தவை.ஆனாலும் அவையளும் முந்தின அரசாங்கங்கள் மாதிரித்தான் நடந்து கொள்ளுகினம் எண்டு சனங்கள் இப்பவே புறுபுறுக்கத் தொடங்கிட்டுதுகள். அதுக்கு நல்ல உதாரணம் பனை அபிவிருத்திச் சபை விசயம்தான்.

ஏற்கனவே உந்தப் பனை அபிவிருத்திச் சபைக்குள்ள நிறையக் குத்துவெட்டுகள், உள்ளடி வேலையள் எல்லாம் நடந்துகொண்டிருந்த காலத்திலதான் திசைகாட்டி அரசாங்கமும் பதவிக்கு வந்தது. வந்த உடனேயே பழைய தலைவரை தூக்கிப்போட்டு, புதுசா ஒருத்தரைப் போட்டது. கட்சிச் சார்பில்லாமல், உண்மையாவே எங்கட பிரதேச அபிவிருத்தியில அக்கறையும், ஆளுமையும் கொண்டவரை தலைவர் பதவியில இருத்தினதால சனத்துக்கு அரசாங்கத்தில ஒரு நம்பிக்கை வந்தது. ஆனால் அந்த நம்பிக்கை கிழமைக் கணக்கிலகூட நிண்டுபிடிக்கேலை. அவரில முந்தி ஏதோ குற்றம் இருந்ததாம் எண்டு சொல்லி, கொஞ்சநாளிலையே அவரைத் தூக்கிப்போட்டு இன்னொருத்தரைப் போட்டினம். ஆனால் அதுக்குப் பிறகும் சபையில ஒரே சலசலப்புத்தான்.

பனை அபிவிருத்திச் சபை ஒரு பணங்காய்க்கிற சபை எண்டதால கனபேர் இதில கண்வைச்சபடி இருக்கினம். இந்தச் சபையின்ர ஹெட் ஒப்பீஸ் யாழ்ப்பாணத்தில இருந்தாலும் அதின்ர ஒரு கிளை கொழும்பில இருக்காம். அங்க இருந்தபடிதான் முந்தின தலைவரும், உள்ளகக் கணக்காய்வாளரும் வேலைசெய்திருக்கினம். ஆனால் அப்பிடி ஒரு ஒப்பீஸ் கொழும்பில இருக்கோணும் எண்டு சபையின்ர சட்டத்தில இல்லை. அதால கொழும்பில இருக்கிற ஒப்பீஸை மூடிப்போட்டு, அங்க இருந்த உள்ளகக் கணக்காய்வாளரை இஞ்ச வரச்சொல்லி இருக்கினம். ஆனால் அமைச்சு மட்டத்தில இருந்து அப்பிடிச் செய்யக் கூடாது எண்டு அழுத்தங்கள் வந்திருக்கு. அதையும் மீறி, சபைக்காரர் உள்ளகக் கணக்காய்வாளரை தற்காலிகமாக வேலையைவிட்டு நிப்பாட்டிப் போட்டு, கொழும்பு ஒப்பீஸை மூடிப்போட்டினம். அதால கனக்கக் காசு சபைக்கு லாபம். ஆனால் தங்கட சொல்லை மீறி சபைக்காரர் இப்பிடிச் செய்துபோட்டினம் எண்டு உதுக்குப் பொறுப்பான அமைச்சர், சபைக்காரரை கூப்பிட்டு கடும் பேச்சாம். அந்த அவமானத்தைச் சகிக்கமுடியாமல் சபையில இருந்த பேராசிரியர் ஒருத்தர் இடையிலேயே எழும்பி 'நீங்களும் வேண்டாம், உங்கட சபையும் வேண்டாம்' எண்டு பதவியை ரிசைன் பண்ணிட்டார். அதுக்குப் பிறகுதான் தலைவரையும் பதவியில இருந்து தூக்கினவை. இனி திரும்ப கொழும்பு ஒப்பீஸையும் திறந்து, சிங்கள ஆள் ஒருத்தரைத்தான் தலைவராப் போட அலுவல் நடக்குதாம். இப்ப சொல்லுங்கோ, உந்த அரசாங்கமும் பழைய ஆக்கள் மாதிரித்தானே அதிகாரத் திமிரோட, சட்டத்தை மதிக்காமல்தான் நினைச்சபடி, மோசடியளுக்கு உடந்தையாத்தானே நடக்குது?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்றுபுதியமுயற்சிகளில்ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக் கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்று வீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக் கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங் களில் அனுகூலம் உண்டாகும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவை களை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள்.

**கன்னி:** தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும். மாலையில் உறவி னர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும். முயற்சிகள் வெற்றிகரமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதி கரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக் கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். மாலையில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதா யம் உண்டாகும். கணவன் மனைவிக் கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு அலுவலகப் பணியின் காரணமாக வெளியூர் செல்லவேண்டிவரும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளை களால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம்,மே 31 ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய விசுவாவசு வருஷ துவஜாரோகண மஹோற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் யூன் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 9ஆம் திகதி திங்கட்கி ழமை தேர்த்திருவிழாவும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் கொடியிறக்கமும் 11 ஆம் திகதி புதன்கிழமை காலை பிராயச்சித்த அபிஷேகமும் 4மணிக்கு வைரவர் உற்சவமும் இடம்பெறும். இப்பெருவிழா நாள்களில் ஆசாரசீலர்களாகப் பங்குபற்றி விநாயகப் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று பிறவிப்பயனை அடையுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

## சிறுவர் நாடக விழா விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, மே 31 கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2025 ஆம் ஆண்டுக்கான அரச சிறுவர் நாடக விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள கலை நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் தத்தமது பிரதேச செயலக கலாசார அலகில் உரிய விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூர்த்திசெய்து கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆவது மாடி, செத்சிறிபாய, பத்திர முல்ல எனும் முகவரிக்கு ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "அரச சிறுவர் நாடக விழா வரையறுக்கப்பட்ட பிரிவு அல்லது திறந்த பிரிவு" எனக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)

## 90ம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 07 . 05 . 2013 | 03 . 03 . 2025 |

### நிகால்டான்சன் ஆர்த்திகன்

(யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி - ஆண்டு 7B மாணவன்)



மூன்று மாதம் ஆகியும் மீளமுடியாத துயரம் ஆற முடியாத
அவலம் ஆண்டவன் அவசரப்பட்டுக் கணக்கை
முடித்தானோ இறைவா உனக்கு இரக்கமில்லையா? ஏன்
இந்தப் பிஞ்சைப் பிய்த்தெறிந்தாய்
ஆசைக்கு ஒன்று ஆஸ்திக்கு ஒன்று என ஆசையாய்
வளர்த்த பிள்ளையை ஏன் பறித்தாய் இறைவா
பெற்ற தாயை தேற்றலாமோ இல்லை ஆசையோடு
வளர்த்த தந்தையை ஆற்றுப்படுத்தலாமோ !
நேரில் பார்க்க ஆசை பார்க்கமுடியவில்லையே..
ஆனால் உன்னை நினைக்காமல்
ஒருநிமிடம்கூட இருக்க முடியாது
கண்கள் இரண்டும் உன்னையே தேடுகின்றன..
ஆர்த்தி நீ மீண்டும் பிறந்து வரவேண்டும்.
உம்மைப் பிரிந்து மூன்று மாதம் சென்றுவிட்டது
இருண்டு போய் இருக்கிறது எமது சூழல் எல்லாம்
உமது சிரிப்பு முகமும் சிரிப்பின் ஒலியும்
ரீங்காரம் இட்டுக்கொண்டிருக்கின்றது
இப்பூமியில் பலகாலம் நீர் வாழ்வீர் சிலகாலம்
எமை வாழ வைப்பீர் என்று இருந்தோம்
இன்று நிலைமை அனைத்தும் மாறிவிட்டது
இந்த மாற்றங்களின் கருவியாய் நீர் ஆனீர்
அன்பு மகனே ! ஆர்த்திக்குட்டி அணைந்தது
எமது ஒளி விளக்கு இன்று ஒலியும் இல்லை
ஒளியும் இல்லை ஒழிந்துவிட்டது எல்லாமே
இருப்பினும் ஒவ்வொரு கணமும் உம்மை எம்
மனக்கண் முன் நிறுத்தி வாழ்ந்துகொண்டிருக்கிறோம்
நீர் இல்லாத வையகத்தில்...

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மகனின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து உதவிகள் அனைத்தும் புரிந்த அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசியிலும், நேரிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் மாலை, மலர்வளையம், முகநூல், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர்தூவி மலர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
077 182 7825,
077 494 0536

கற்பக்குனை
உடுவில், சுன்னாகம்.

(CS/58417) J-1



## நடை பவனி !

'போதைவஸ்துகளற்ற எதிர்காலத்தைநோக்கி' எனும் தலைப்பிலான கவனவீர்ப்பு நடைபவனி கடந்த 26 ஆம் திகதி வவுனியாவில் ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்தடைந்து யாழிலிருந்து பருத்தித்துறையைச் சென்றடைந்தது. இன்று சனிக்கிழமை பருத்தித்துறையில் இருந்து யாழ். [illegible] பகுதியை குறித்த நடைபவனி வந்தடையும். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# தீர்ப்பு வழங்கிய செய்தி!

சதொச நிறுவனத்தின்மூலம் கரம்போர்ட், டாம்போர்ட் என்பவற்றைக் கொள்வனவுசெய்து விநியோகித்து பெரும் நிதியிழப்பை அரசாங்கத்துக்கு ஏற்படுத்திய குற்றச்சாட்டுகளுக்காக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 வருடங்கள் சிறைத்தண்டனையும், சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் வர்த்தக அமைச்சருமான நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருடங்கள் சிறைத்தண்டனையும் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஊழலற்ற நாடே அனைத்துத் துறைகளிலும் வாழும், வளரும். ஆதலால், முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பை எத்தனை பாராட்டினாலும் அத்தனையும் தகும். ஆனால், இந்தத் தீர்ப்பின் பின்னாலுள்ள மறுபக்கம் தொடர்பில் ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் சிந்திக்கவேண்டும். இந்தத் தீர்ப்பு சொல்லாமல் சொல்லிநிற்கும் கதையும் அதுவே.

அதாவது, இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதுதான் இன்று அனைவருடைய எதிர்பார்ப்பாகவும் காணப்படுகின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதைத்தான் கடந்த பல மாதங்களாக வலியுறுத்திவருகின்றது. தூதுவர்கள், இராஜதந்திரிகள், வெளிநாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் தூதுக்குழுக்கள் உள்ளிட்ட தரப்பினரும் இலங்கையின் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இதற்கு அரசாங்கம் சொல்கின்ற காரணம், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர் ஏற்படக்கூடிய வெற்றிடத்தை நிவர்த்திசெய்யக்கூடியவாறு பிறிதொரு சட்டத்தை உருவாக்கிய பின்னர், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்பதே.

ஆனால், யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் அண்மையில் சுட்டிக்காட்டியதைப்போன்று, தற்போதுள்ள குற்றவியல் சட்டக்கோவைகளின் கீழேயே இந்த விடயங்களை அணுகலாம் என்பதைத்தான் முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பு கட்டியம் செய்கின்றது. ஊழல் மோசடிகளுக்கு எதிராக 25 வருடங்கள் கடூழியச்சிறைத்தண்டனை விதிப்பதற்குச்சட்டத்தில் இடமுண்டென்றால், பயங்கரவாதம் சார்ந்த குற்றங்களுக்கும் அத்தகைய தண்டனைகளை விதிப்பதற்குச் சட்டத்தில் இடமிருக்கவே செய்யும். எனவே, குற்றவியல் சட்டக்கோவையில் எத்தகைய பலவீனம் உள்ளதென்று அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றான சட்டத்தை உருவாக்க எத்தனிக்கின்றது என்பது அரசாங்கத்துக்கே வெளிச்சம்.


சிலவேளைகளில் அவசியம் கருதிய, அரசியல் தேவை கருதிய தடுத்துவைத்தல் மற்றும் விசாரணைகளுக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றான சட்டமொன்று அரசாங்கத்துக்குத் தேவைப்படலாம். ஆனால், அத்தகைய நடவடிக்கைகள் மிகவும் பாரதூரமானவை, தவறானவை என்பதுதான் எதிர்க்கட்சியாக இருந்த காலப்பகுதியில் அநுர தரப்பினரின் கருத்தாக இருந்தது. எனவே, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட (வழக்கு விசாரணைகளுக்கு முன்னரான) நீண்டகாலத் தடுத்துவைத்தல்களுக்குத்தான் ஒரு மாற்றுச்சட்டம் அவசியமாகக் கருதப்படுகின்றது என்றால், அதற்கு தற்போதைய சட்டமே இருந்துவிட்டுப் போகலாம். எனவே, முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, நளின் பெர்னாண்டோவுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை ஊழல்வாதிகளுக்கு மட்டும் ஒரு பாடமாக அமையவில்லை. மாறாக அரசாங்கத்துக்கும் அதுவொரு செய்தியாகவே காணப்படுகின்றது என்பதே உண்மை.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதிவெற்றிக்கு உரியவர்கள்.

– சுபாஷ் சந்திரபோஸ் –



## விழிப்புணர்வை ஏற்படுத்த ஜீன் 2 முதல் வரிவாரம்

**கொழும்பு, மே 31**

**“பது சக்தி” என்ற பெயரில் வரி வாரம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் யூ.டி.என். ஜயவீர தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எதிர்வரும் 2ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை ஒரு வார காலத்துக்கு இந்த வரி வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் வரி செலுத்துதல் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.

இதுவரை 10 மில்லியனுக்கும் அதிகமானவர்களுக்கு உள்நாட்டு இறைவரித்திணைக்களம் வரி அடையாள இலக்கம் வழங்கியுள்ளது. ஆனால், இந்த இலக்கங்கள் பல்வேறு தகவல் மூலங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டவையாகும்.

மக்களுக்கு நாம் கூறவிரும்புவது, உங்களுக்கு ஏற்கனவே திணைக்களத்தால் வரி அடையாள இலக்கம் வழங்கப்பட்டிருக்கலாம். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்துக்குச் சென்று, உங்கள் அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி உங்களுக்கு வரி அடையாள இலக்கம் வழங்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்கமுடியும்.

வரி அடையாள இலக்கம் இலக்கம் இல்லாதவர்கள், திணைக்களத்திற்கு நேரடியாக வராமல், முதலில் இணையத்தளத்தில் சரிபார்க்கலாம். ஏற்கனவே வரி அடையாள இலக்கம் இருந்தால், அதன் அச்சிடப்பட்ட பிரதியைப் பெறமுடியும்- என்றார். (எ-இ)



## பொலிஸார் இடமாற்றம்

கொழும்பு, மே 31

நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களின் 16 பொறுப்பதிகாரிகளுக்கு, உடனடி இடமாற்றங்களை இலங்கை பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. அதிகாரபூர்வ அறிக்கையின்படி, தேசிய பொலிஸ் ஆணையகத்தின் ஒப்புதலுடன் இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மத்தள, தங்காலை, வாதுவ, நிந்தவூர், பன்சியகம, கிளிநொச்சி, பொத்தபிட்டி, கம்பொல, தர்மபுரம், கலன்பிந்துனுவேவ ஆகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளே இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் பொலிஸின் சட்டப்பிரிவு உட்பட்ட பல பிரதான பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## தரம் 6க்கு மாணவர்கள் உள்ளீர்ப்பு


கொழும்பு, மே 31

2024ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், 2025ஆம் ஆண்டு 6 ஆம் தரத்திற்கு மாணவர்களை உள்வாங்குவதற்கான முதல் சுற்று மேன்முறையீட்டுப் பெறுபேறுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த பெறுபேறுகளை http://g6application.moe.gov.lk என்ற இணையத்தளத்திற்குச் சென்று பார்வையிடமுடியும் எனவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## பொம்மைகளுக்குள் போதைப்பொருள்

கட்டுநாயக்க விமானநிலையத்தில் நேற்று 10.3 கிலோ கொக்கெய்னுடன் வெளிநாட்டவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் மூன்று பொம்மைகளுக்குள் போதைப்பொருள்களை மறைத்துவைத்துக்கொண்டுவந்துள்ளார். பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் விமான நிலைய சுங்கப்பிரிவு அதிகாரிகள் நடத்திய கூட்டுச் சோதனையின்போது அவர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர் 38 வயதுடைய இத்தாலிய நாட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## மாணவன் கொலை; குற்றவாளிக்கு மரணதண்டனை


கொழும்பு, மே 31

16 வயது பாடசாலை மாணவனை, ஓடும் முச்சக்கரவண்டியில் இருந்து தள்ளிக் கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு, மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பதுளை மேல் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன அல்விஸ், சந்தேகநபரை கொலைக்குற்றவாளி என அறிவித்து, நேற்றுமுன்தினம் அவருக்கு மரணதண்டனையை விதித்துள்ளார். குறித்த சம்பவத்தின்போது குற்றஞ்சுமத்தப்பட்டவர் மது போதையில் இருந்தார் என்பது விசாரணைகளின்போது கண்டறியப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை- வைகாசி 18
01.06.2025
சுபநேரம் : 08.52- 10.22
ராகுகாலம் : 04.22 - 05.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பலத்த காற்றால் பயிர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.குடாநாட்டில் வீசும் கடும் காற்றினால் பயிர் மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வாழைமரங்கள், பப்பாசிகள் காய்த்துவரும்நிலை யில் குலைகளுடன் முறிந்து வீழ்கின்றன.

இதனால் வாழ்வாதாரப் பாதிப்பை எதிர்கொண்டுள் ளதாக செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள் ளனர். (ச-25, 17)

### கமநல சேவை நிலையங்களிலுள்ள

# டிராக்டர்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவுகளின்கீழ் காணப்படும் ஒவ்வொரு கமநல சேவைகள் நிலையங்களில் உள்ள உழவு இயந்திரங் களை வினைத்திறனாகப் பயன்படுத்துவது தொடர்பாக மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்த விவசாயிகள், கமநல சேவைகள் நிலையங்களில் காணப்படுகின்ற உழவு இயந்திரங் கள் விவசாயப் பருவகாலத்துக்கு ஏற்றவாறு சேவை வழங்குவதில் பிரச்சினைகள் உள்ளன என்றும், பல உழவு இயந்திரங்கள் செயலி ழந்த நிலையில் உள்ளன என்றும் சுட்டிக்காட்டினர்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம் சார்பாக வந்திருந்த அதிகாரி, அமைச்சின்மூலம் 110 உழவு இயந் திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என் றும், அவற்றில் 60 உழவியந்திரங் களே இயங்குநிலையில் உள்ளன என்றும் தெரிவித்துள்ளார். 50 உழவு இயந்திரங்கள் திருத்தமுடியாத நிலையில் உள்ளன என்றும் குறிப் பிட்டார். அதையடுத்துக் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்டப் பதில் செய லாளர், உழவு இயந்திரங்கள் தொடர் பில் அறிக்கையிட்டு, அவற்றை என்ன செய்வது? உழவு இயந்திரங் களின் ஓட்டுநருக்கான கூலி விவ சாய கால போகங்களுக்கு அப்பால் சாதாரண காலங்களில் கமநல சேவை நிலையங்களில் உள்ள உழவு இயந்திரங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பவை தொடர் பில் எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன் னதாக அறிக்கையிட வேண்டும் என்று பணித்தார்.

இந்த அறிக்கை எதிர்வரும் 30ஆம் விவசாய அமைச்சின் செயலாள ருக்கு அனுப்பிவைக்கப்படும் என் றும் அவர் குறிப்பிட்டார். (எ-125)

## பழுதடைந்த அப்பளம் விற்றவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், மே 31

பழுதடைந்த அப்பளத்தை விற்பனைசெய்தவர்க ளுக்கு 52 ஆயிரம் ரூபா தண்டப்பணம் யாழ்.மேல திக நீதிவான் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

நீர்வேலிப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்க ளில் சுகாதாரப் பிரிவினர் நடத்திய சோதனை நடவ டிக்கையின்போது, பழுதடைந்த, மனித பாவ னைக்கு உதவாத அப்பளங்கள் கைப்பற்றப்பட்டன.

அதனையடுத்து விற்பனையாளருக்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு கடந்த புதன்கிழமை யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் விசாரணைக் காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது அப்பளத்தை உற்பத்திசெய்தவருக்கு 20 ஆயிரம் ரூபாவும், அவற்றை விநியோகம் செய்தவருக்கு 20 ஆயிரம் ரூபாவும், வர்த்தக நிலைய உரிமையாள ருக்கு 12 ஆயிரம் ரூபாவும் தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ச-25, 17)

## வங்கி ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

மக்கள் பாதிப்பு

கொழும்பு, மே 31

அரச வங்கிகளின் ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தொழிற்சங்க நடவடிக்கையால் வடக் கில் வங்கிச் சேவையைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டதுடன் சேவையைப் பெறமுடியாது ஏமாற்றத்துடனும் திரும்பிச் செல்லவேண்டிய சூழல் ஏற்பட்டது.

அரச வங்கிகளின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட் டமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் காலை 10.30 தொடக்கம் வங்கிக் கிளைகளை மூடி கொடுக் கல் வாங்கல் செயற்பாடுகளிலிருந்து விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-125,56)

## பொறுப்பற்ற தன்மையில் கமநலத்திணைக்களம்!

யாழ்ப்பாணம், மே 31

யாழ்.மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் நேற்றுமுன் தினம் நடைபெற்றநிலையில் அதில் கமநல அபிவி ருத்தித் திணைக்கள அதிகாரிகள் பங்கேற்காமை குறித்து யாழ். மாவட்டப் பதில் செயலாளர் ம.பிரதீ பன் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற யாழ். மாவட்ட விவசாயக்குழுக்கூட்டத்தின்போது கமநல சேவைகள் நிலைய உழவு இயந்திரங்கள், நெல் அழிவு உட்பட பல கமநல அபிவிருத்தித் திணைக் களம்சார் பிரச்சினைகள் தொடர்பில் விவசாயிகள் சுட்டிக்காட்டினர். இதற்குப் பொறுப்புவாய்ந்து பதில் வழங்கவேண்டிய கமநல உதவி ஆணையாளர் கூட்டத்துக்கு வருகை தராதநிலையில் அவருடைய திணைக்களத்தின் சார்பில் வருகைதந்த மற்று மொரு அதிகாரி சரியான தரவுகளைக் கொடுக்காது திக்குமுக்காடியுள்ளார். அதன்போது மாவட்டப் பதில்செயலாளர், அரசாங்கத்தின் மிக முக்கியமான திணைக்களம் கமநல அபிவிருத்தித் திணைக்க ளம். விவசாயிகளின் பிரச்சினைகளைக் களையும் இந்தக் கூட்டத்துக்கு அவர்களின் பிரசன்னமே பிரதானமானது என்றும் கடிந்தார். (ச- 25, 125)

## சிறந்த தலைமைத்துவத்துக்காக தமிழினம் காத்திருக்கவேண்டும்

யாழ்.பல்கலை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 31

தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத் தில் இதுவரை ஒரு சிறந்த தலைவரை ஜனநாயக அரசியலில் சந்திக்கமுடியா மலிருப்பது தமிழினத்தின் துர்ப்பாக்கி யம். ஆழமான, புதிய தலைமைத்துவத் துக்காகத் தமிழினம் காத்திருக்கவேண் டும். இவ்வாறு யாழ்ப்பாணப் பல் கலைக்கழகக் கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.சர்வேஸ் வரா தெரிவித்துள்ளார்.

யாழ். மல்லாகம் மகாவித்தியாலயத் தின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு செவ்வாய்க்கிழமை யாழ்.மல்லாகம் மகாவித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது. இதன்போது பிரதமவிருந்தின ராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எந்தவொரு வரலாறும் 30 வருடங்கள் ஒரே பாதையில் பயணிக்காது. மிகப் பெரும் மாற்றங்களைச் சந்திக்கும். 1970ஆம் ஆண்டுகளின்பிற்பகுதியில் ஆரம்பித்த ஆயுதப்போராட்டம் 1980, 1983ஆம் ஆண்டுகளில் முனைப்புப் பெற்று 2009 ஆம் ஆண்டில் முடி வுக்கு வந்தது.

அதன்பின்னர் தற்போது முன்னெடுக் கப்படும் அகிம்சைப் போராட்டத்தில் பாதி முடிவுக்கு வந்துவிட்டது. இந்தப் பாதி வரலாற்றுச் சுழற்சியில் பெரும் அரசியல் பிரளயங்கள் எம் தமிழர் அர சியலில் நிகழ்ந்திருக்கின்றன.

சுமார் 60 வருட ஜனநாயகப் போராட் டம், அதற்குப் பின்னர் 30 வருட ஆயு தப் போராட்டம் என நூற்றாண்டு கடந்த தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத் தில் இதுவரை ஒரு தேர்ந்த தலைவரை ஜனநாயக அரசியலில் சந்திக்கமுடியா மலிருப்பது தமிழினத்தின் துர்ப்பாக்கி யம் - என்றார். (ச-41-66)



### விவசாய நிலங்களில்

## திண்மக்கழிவுகள் கொட்டினால் பரு. நகரசபை மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 31

வடமராட்சி பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குடத்த னைப் பகுதியில் அமைந்துள்ள விவ சாய நிலங்களில் பருத்தித்துறை நகர சபையினால் திண்மக்கழிவுகள் இனி மேல் கொட்டப்பட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட விவசாயக்குழுக்கூட்டத்தில் அறிவுறுத் தப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் பருத் தித்துறை நகரசபையினரால் தொடர்ச் சியாக திண்மக்கழிவுகள் கொட்டப்படு கின்றன. இதனால் விவசாயம், நன்னீர் என்பன முழுமையாக பாதிக்கப்படுகின்ற சூழல் காணப்படு கின்றது. இவ்வாறான சுற்றுச்சூழலுக்கு விரோதமான செயற்பாடுகளை பருத் தித்துறை நகரசபை இடைநிறுத்த வேண்டும் என குழுக்கூட்டத்தில் குடத் தனைக் கமக்காரர் அமைப்பின் பிரதி நிதிகள் சுட்டிக்காட்டினர். குறித்த பகுதி யில் கழிவுகளை கொட்டுவதற்கு ஏற் கனவே தடைவிதிக்கப்பட்டுள்ளது எனப் பிரதேச செயலாளர் தெரிவித் தார். இதன்போது யாழ்.மாவட்டச் செய லர், இனிவரும் காலங்களில் தொடர்ச் சியாக கழிவுகள் கொட்டப்பட்டால் சம் மந்தப்பட்ட தரப்புகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ச- 25,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID 2025/01
# JAFFNA MUNICIPAL COUNCIL, NORTHERN PROVINCE, JAFFNA

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Municipal Commissioner, Jaffna Municipal Council, Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council Fund
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Highway Construction ,building construction for grade mentioned in the table below " Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987." (package 01- package 04)
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Documents (Works specified in GROUP B in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-05-31 To 2025-06-16 during 09:00 hrs and 14:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Municipal Commissioner, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna (T.P:021-2217691/021 222 2019, Fax:021 222 2334) from 9:00 hrs to 14:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Municipal Commissioner, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Jaffna Municipal Council, Point pedro Road, Nallur, Jaffna as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-05-31 To 2025-06-16 | | | | |
| | Pre-Bid Conference | | | At 11.00 AM on 2025-06-06 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 AM on 2025-06-17 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| Group B | | | | | | | | |
| JMC/PMD/CF/2025/I/01 | Improvements to Nedunkulam Pillaiyar Kovil Road, Improvements to Old park 1st lane, Renovation of Rajenthira Road Drainage (Culvert) & Construction of Cross Drainage Near the Thodarmaadi (Beach Road, 1 st Lane link road) | 7.47 | 84 | C7 or Above (Highway Construction) | 3,500.00 | 111,000.00 | 2025-09-29 | 77 Days |
| JMC/PMD/CF/2025/I/02 | Improvements to Jinna road, Improvements to Seeniar Lane (Near the Kaladdy Amman Kovil), Improvements to Point pedro Road 3rd lane, Improvements to Rakka Lane (Near the Maruthadykulam) | 6.9 | 63 | C7 or Above (Highway Construction) | 3,500 .00 | 102,500.00 | 2025-09-29 | 77 Days |
| JMC/PMD/CF/2025/I/03 | Construction of Murukamoorthy Road Culvert (Near the Murukamoorthy Road and Periyathampiran Road Junction) , Improvements to Moothavinayarar veethy(CONSTRUCTION OF MOOTHTHAVINAYAGAR KOVIL ROAD AND AASEERVATHAPPAR ROAD JUNCTION CULVERT WORK) , Improvements to Velappar Veethy | 7.28 | 84 | C7 or Above (Highway Construction) | 3,500.00 | 108,000.00 | 2025-09-29 | 77 Days |
| JMC/PMD/CF/2025/I/04 | Construction of Boundary Wall at Kakkaitivu Recycling Center Stage II, Improvements to Araly road | 5.59 | 84 | C7 or Above (Highway & Building Construction) | 3,500.00 | 83,000.00 | 2025-09-29 | 77 Days |
| JMC/PMD/CF/2025/I/05 | Improvements to Sinnakadai Market | 4.04 | 84 | C8 or Above (Building) | 3,500.00 | 59,500.00 | 2025-09-01 | 49 Days |
| JMC/PMD/CF/2025/I/06 | Improvements to Idukaddu road | 4.75 | 63 | C8 or Above (Highway Construction) | 3,500.00 | 71,000.00 | 2025-09-01 | 49 Days |

Chairman
Regional Procurement Committee,
Jaffna Municipal Council,
Point pedro Road, Nallur, Jaffna

(CR/45229) J-1

வீடு வாடகைக்கு உண்டு
கொக்குவில் சந்தி K.K.S வீதியில்
சிறிய குடும்பம் ஒன்று
தங்குவதற்கு உடனடியாக வீடு
வாடகைக்கு உண்டு
தொடர்பு: 076 833 7737

பெண் பணியாளர் தேவை
பெண் நோயாளி ஒருவரை
வீட்டிலிருந்து பராமரிப்பதற்கு
பெண் பணியாளர் தேவை.
தொடர்பு:- 071 847 5539

வேலை வாய்ப்பு
யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.
1. Manager (2 Years Experience)
2. Administration (2 Year Experience)
3. Computet Billing + Cashier
4. Sales Assistant
5. Packing (பொதியிடல்)
6. Part Time - 5.00pm to 10.00pm
7. வயது எல்லை 18 - 35
யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
விபரங்களுக்கு :- 077 419 5209
077 419 5218

Chundikuli Girls' College
Old Girls' Association, Jaffna
Annual General Meeting
Date : Saturday, 7th June, 2025
Venue : College hall
09.00 a.m : Holy communion & worship service at St. John the Baptist's Church
10.30 a.m : Principal's Tea
11.00 a.m : A.G.M
12.30 p.m : Fellowship Lunch
Tickets - Rs. 1000/=
All old girls are cordially invited
Secretary


இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 24.05.2023 சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர் சங்கரப்பிள்ளை புவனேஸ்வரன்
(இலங்கையின் முதல் முதலாக வெளிவந்த தமிழ் திரைப்படமான வெண்சங்கு திரைப்படத்தின் கதாநாயகன்)
அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (31.05.2025) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்
இல.55, மணற்தரை வீதி,
கந்தர்மடம்.
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 09 . 1947



மறைவு
30 . 05 . 2025

## சபாபதிப்பிள்ளை தர்மகுலசிங்கம்

செட்டித்தெரு, நல்லூரடியைப் பிறப்பிடமாகவும், கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை தர்மகுலசிங்கம் அவர்கள் நேற்று (30.05.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - லக்ஷ்மிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெயசுந்தரி அவர்களின் அன்புக் கணவரும், கோபிகிருஷ்ணா, தனஞ்சனி, ஹரிகிருஷ்ணா, சாயிகிருஷ்ணா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஷாலினி, நிஷாந், புவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷகிஸ்னு, ஆருஷன், ஆரண்யா, ஆதீசன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, பூபாலசிங்கம், மகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
075 573 0310, 077 573 0308

கலாசாலை வீதி,
திருநெல்வேலி

# நீங்காத நினைவுகளுடன் 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் : 10.07.1967 மறைவு : 01.05.2025

அன்புடன் பண்பு சேர்த்து எமைவளர்த்தெடுத்து அவனியில் நல்வாழ்வு வாழ வழிகாட்டிய தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கடந்த (01.05.2025) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் – **தவயோகராணி முருகதாஸ்** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (29.05.2025) வியாழக்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.05.2025) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தெடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

582/64 செபஸ்தியார் வீதி
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.
077 684 8346

# மரண அறிவித்தல்



## கவிதா ஜெயக்குமார்

(சங்கீத ஆசிரியை - கோண்டாவில் இந்துக்கல்லூரி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கவிதா ஜெயக்குமார் அவர்கள் நேற்று (30.05.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து நாகராஜா - நாகராஜா கமலாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், பாலகிருஸ்ணன் ஜெயக்குமாரின் அன்பு மனைவியும், பாலகிருஸ்ணன் - கெங்கேஸ்வரி தம்பதியரின் மருமகளும், டர்ஷான் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - 8B ), அக்ஷிதா (யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் - 5F) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லதா (சுவிஸ்), கேமமாலினி (இலங்கை), கஜேந்திரன், திருக்குமரன் (சவுதி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், துஸ்யந்தன் (சுவிஸ்), சுரேஸ்குமார் (இ.போ.ச), குகரஞ்சினி, கௌசிகா, கிருஸ்ணவேணி, கோகுலவாணி, சாந்தகுமார், றோகினி, ரவிக்குமார், கஜன், அபிதா, ஜேயன் ஆகியோரின் மைத்துனியும், சி.பத்மநாதன், சி.தயாநாதன், சி.ஞானகுமார், பி.பாலேந்திரன், சி.சிவகுமார் ஆகியோரின் பெறாமகளும், இ.இலங்கேஸ்வரியின் மருமகளும், சிந்து, சுகன்ஜா, வெங்கடேஸ், துஜானா, பவித்ரா, பதுஷா, நிதுஷன், பிரியங்கா, பிரசாந், பிரதீக்கா ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (02.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 12.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னை மடியில் 28.01.1977
30.05.2025

தகவல்:
குடும்பத்தினர்

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழில் 3 மாதங்களில்

# 76 வர்த்தகர்களுக்கு 6,11,500 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையால் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப் புகளைத் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்ட சட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் 6 இலட்சத்து 11 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக் கப்பட்டுள்ளது என மாவட்ட இணைப்பதிகாரி தெரிவித்துள்



ளார். குறித்த காலப்பகுதியில் 194 சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்த சுற்றிவளைப் புகளில் 76 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலமாக கோரப்பட்ட தகவலுக்கு அமைவாக அவர் இதனைத் தெரிவித்தார்.

(ச-33-125)

## இளங்கலைஞர் மன்றத்தில் மாபெரும் கலைவிழா

யாழ்ப்பாணம், மே 31

ஈழத்தமிழ்க் கலைஞர் ஒன்றியம் யாழ். பிராந்தியத்தின் ஏற்பாட்டில், மாபெரும் கலைவிழா நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. கலைவிழாவில் தென்னிந்தியத் தொலைக்காட்சியில் புகழ்பெற்ற ஈழத்துப் பாடகர்கள் உட்படப் பலர் பங்கு பற்றவுள்ளனர். இதேவேளை ஈழத்தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தால் ஜூன் மாதத் தொடக்கத்தில் நாடளாவிய ரீதியில் கவிதைப் போட்டியை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ச-25, 66)

**வேலை வாய்ப்பு** YMCA
யாழ்ப்பாணம் YMCA நிறுவனத்தின் விடுதி மற்றும் வளாகப்பராமரிப்பாளர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
தொடர்புகளுக்கு: 077 476 6300 021 222 2499

**வேலையாட்கள் தேவை**
திருநெல்வேலியில் அமைந்துள்ள Abans நிறுவனத்திற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
077 359 9000

**இராஜ வீதியில் காணி விற்பனைக்கு**
கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட இராஜவீதி, பள்ளக்கலட்டி ஒழுங்கையில் முப்பது (30) பரப்பு காணி இரண்டு (2) பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் நேரில் வருகை தரவும்.
தொடர்பு:- 077 276 0493

**காணவில்லை**



செல்வபுரம் முல்லைத்தீவில் 79 வயதுடைய சலோஸ்சியாம்பிள்ளை மேரிபிலோமினா என்பவரை 10.04.2025 இல் இருந்து காணவில்லை. அவரால் கதைக்கவும் முடியாது, காதும் கேட்காது. அவரைக் கண்டவர்கள் தொடர்புகொள்ளவும்.
077 557 0692
070 176 6178

**31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 01.05.2025 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி
அமரர்
**சேனாதிராஜா செல்லக்கண்டு**
அவர்களின்
வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (31.05.2025) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மாசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
தோற்றம் 19.06.1934
மறைவு 01.05.2025
அம்மன் கோவில் வீதி, கோண்டாவில்
குடும்பத்தினர் 077 969 7111


# ‘எலிமினேட்டர்’ ஆட்டத்தில் மும்பை அசத்தல் வெற்றி!

## வெளியேற்றப்பட்டது குஜராத்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற எலிமினேட்டர் ஆட்டத்தில் குஜராத்தைத் தோற்கடித்து, இரண்டாவது குவாலிபையர் ஆட்டத்துக்குத் தகுதிபெற்றது மும்பை.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இரண்டாவது இன்னிங்ஸில் பனிப்பொழிவு இருக்கும் என்ற நிலையில், மும்பை அணியின் தலைவர் பாண்டியாவின் முடிவு பலரையும் ஆச்சரியப்படுத்தியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது.



அதிகபட்சமாக ரோகித் சர்மா 81 ஓட்டங்களையும், போர்ஸ்ரெயவ் 47 ஓட்டங்களையும், சூரியக்குமார் யாதவ் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரசித் கிருஷ்ணா மற்றும் சாய் கிஷோர் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணிக்கு அணித்தலைவர் கில் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். ஆனால் பிறிதொரு ஆரம்ப வீரரான சாய் சுதர்சனும், மத்திய வரிசை வீரர்களும் அற்புதமாக விளையாடினார்கள். எனினும் குஜராத் அணியால் 6 விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டங்களையே பெறமுடிந்தது. சாய் சுதர்சன் 80 ஓட்டங்களையும், வொஷிங்டன் சுந்தர் 48 ஓட்டங்களையும் பெற்றனர்.

நாளை இடம்பெறவுள்ள இரண்டாவது குவாலிபையர் ஆட்டத்தில் பஞ்சாப் மற்றும் மும்பை அணிகள் மோதவுள்ளன. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி இறுதியாட்டத்தில் பெங்களூருடன் மோதும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பவளவிழா

யாழ்ப்பாணம், மே 31

சாவகச்சேரி பிரதேசசபையின் ஓய்வுநிலை முன்னாள் செயலாளர் வே.சிவராஜ லிங்கத்தின் பவளவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு அல்வாய் மாறம்புலம் மாணிக்கப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஜீவநதி சஞ்சிகையின் ஆசிரியர் க.பரணிதரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக மு.அநாதரட்சகன், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைச் செயலாளர் திருமதி தயானந்தன் தர்சினி, க.மகாவலிராஜன், கொற்றை பி.கிருஷ்ணானந்தன், சாவகச்சேரி பிரதேசசபை ஓய்வுபெற்ற முகாமைத்துவ உதவியாளர் நா.தங்கவேல், சிங்கள் மொழிப்பயிற்சி ஆசிரியர் சுனில் ஆரியரத்ன, ஆ.சிவலிங்கம், மா.நவநீதமணி, ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து பவளவிழா நாயகன் கௌரவிப்பும் இறுதியாக விழா நாயகனின் ஏற்புரையும் இடம்பெறும். (ச-41-131)

# அரச நாடக விழாப் போட்டி விண்ணப்பங்கள் கோரல்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2025 ஆம் ஆண்டு அரச நாடக விழாவுக்கான (நெடும் நாடகம் மற்றும் குறு நாடகம்) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ள கலை நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் தத்தமது பிரதேச செயலக கலாசார அலகில் உரிய படிவத்தினைப் பெற்று பூர்த்திசெய்து கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு ஜுன் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும்.

நெடும் நாடகப் போட்டிக்கான விண்ணப்பமாயின் “அரச நாடக விழா 2025- நெடும் நாடகம்” எனவும், குறுநாடகப் போட்டிக்கான விண்ணப்பமாயின் “அரச நாடக விழா - 2025 குறுநாடகம்” எனவும் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச- 25, 9)



# ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 31

15 கிராம் ஹெரோய்ன் மற்றும் 2 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சுன்னாகம் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் நேற்று இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ராமநாயக்க மற்றும் சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி கலும் ஆகியோரின் வழிப்படுத்தலுக்கு அமைவாக வீடொன்று முற்றுகையிடப்பட்டு அந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-125)

# மகாபாரத சொற்பொழிவு



யாழ்ப்பாணம், மே 31

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக மகாபாரதச் சொற்பொழிவும், நிதியுதவிகள் வழங்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் ஆசிரியர் இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு ‘மகாபாரதம்’ எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவின் ஒரு பகுதியை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து வண்ணார் பண்ணை கலட்டி ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயம், உடுவில் பிரஹரிஸ் இசைமன்றம், வடமராட்சி லயன்ஸ் கழகம், சுன்னாகம் அபிநயா கலைக்கழகம் ஆகியவற்றின் கோரிக்கைக்கமைவாக சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் நிதியுதவியும் வழங்கிவைக்கப்பட்டது. (ச-66)



தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பெண்களுக்கான எல்லேபோட்டியில் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம், ஒன்பதாவது தடவையாக சம்பியனாகி சாதனைபடைத்துள்ளது. (ச-25,9)



வலயமட்ட வலைப்பந்தாட்டப் போட்டி 16 வயதுப் பெண்கள் பிரிவில் உயரப்புலம் மெதடிஸ்மிஷன் வித்தியாலய அணியினர் 3 ஆம் இடத்தைப்பெற்று சாதனைபடைத்துள்ளனர். (ச-25)

# யோகாப் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 31

வடமாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில், இலவச யோகாக்கலை பயிற்சிநெறியின் புதிய பிரிவு வகுப்புகள் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் ஜுன் மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகி 3 மாத காலப்பகுதி வரை காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரை நடைபெறவுள்ளன.

இளைஞர் விவகார அலகில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். படிவங்களைப் பெற்று பதிவினை மேற்கொள்ளாதவர்கள் பயிற்சி ஆரம்பிக்கும் இடத்துக்கு காலை 6 மணிக்கு வருகைதந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து வளவாளரிடம் பதிவை மேற்கொண்டு பயிற்சியில் இணையலாம்.

பயிற்சியில் இணையவருவோர் தளர்ச்சியான ஆடை அணிந்து வருவதுடன் விரிப்பு ஒன்றினையும் எடுத்துவருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளவிக்...

உதிர்ந்து வீழ்ந்தமையால், அதிலிருந்து கலைந்து பறந்த குளவிகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தாக்கியுள்ளன.

இதனால் 78 மாணவர்களும் மேலும் சில ஆசிரியர்களும் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். அவர்கள் ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, 45 வரையான மாணவர்களும், சில ஆசிரியர்களும் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இரு மாணவர்களும் ஓர் ஆசிரியரும் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அறிந்ததும், உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாதிக்கப்பட்ட மாணவர்களைப் பார்வையிட்டார். அத்துடன், பாடசாலை வளாகத்திலுள்ள தேனீக்கூடுகளை அகற்றாமல் அசமந்தமாகச் செயற்பட்டமைக்கு வனஜீவராசிகள் திணைக்களத்தினரை நேரடியாகச் சென்று கண்டித்ததுடன் அவற்றை அகற்றுமாறு உத்தரவிட்டார். (அ-ம-26)

## இளைஞர்...

கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். நோயால் அவர் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும், அதனால் ஏற்பட்ட விரக்தி காரணமாக உயிரிழந்திருக்கலாம் என்றும் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26-159)

## மத்திய...

குழுக்கூட்டத்திலும் எடுக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் கனகேஸ்வரன் தலைமையில், மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போதே, மன்னார் மாவட்ட மருத்துவமனையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை மற்றும் வளப்பற்றாக்குறை ஆகியவற்றை நிவர்த்திசெய்யும் விதமாக, அந்த மருத்துவமனையை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுசெல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்படும்போது, அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடுமையான கண்டனத்தைப் பதிவுசெய்துள்ளார்.

'மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு செல்வதானது, மாகாண அதிகாரங்களை மீளப்பெறும் முனைப்புடன் செயற்படும் மத்திய அரசின் நிகழ்சிநிரலை இலகுபடுத்துவதாக அமையும்' என்று ரவிகரன் எம்.பி. தெரிவித்துள்ளார். (அ-ம-56-26-60-213-113)

## தாயகம்...

குற்றப் புலனாய்வுத்துறையால் கைது செய்யப்பட்ட அந்த முதியவர், மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை ஜூன் மாதம் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாடுதிரும்புவதற்குத் தேவையான சகல ஆவணங்களும் அவரிடம் இருந்த போதும், சர்வதேச சட்டப்படி அவர் ஓர் 'அகதி' என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் அவரை பிணையில் விடுவிப்பதற்கு அரசதரப்பு கடும் எதிர்ப்பைப் பதிவு செய்த காரணத்தால் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அவரது சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இருந்து அகதிகளாகச் சென்றவர்களை மீண்டும் நாட்டுக்கு வருமாறு ஸ்ரீலங்கா அரசாங்கம் கோரி வருகின்றது. இவ்வாறான நிலையில், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய வருகைதந்த முதியவரை அவருடைய வயோதிபத்தையும் கருதாது விளக்கமறியலில் வைத்துள்ளமைக்கு நாடாளாவிய ரீதியில் கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## ரூ.200...

பணிப்பாளர் மருத்துவர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அரசாங்கத்தின் நிதியொதுக்கீட்டின் கீழ், 200 மில்லியன் ரூபா செலவில் சுகாதாரச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்காக 23 திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இவற்றில் தற்சமயம் 10 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-125)

## மனிதர்களை...

குழுக்கூட்டத்தில் பிரதேச வாசிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பெண்களாகிய நாம் எமது வீடுகளில் வீட்டுத்தோட்டத்தை மேற்கொண்டுவருகின்றோம். பயன்தரு மரக்கறிவகைகளை எமது வீடுகளிலே நாம் உருவாக்கியுள்ளோம். எமது பகுதியில் 42 ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்துவரும் நிலையில், 42 ஆயிரம் குரங்குகளும் வசிக்கின்றன. காலப்போக்கில் மனிதர்களின் எண்ணிக்கையைவிட குரங்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகின்றது - என்றனர்.

இதைத் தொடர்ந்து மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:-

சாவகச்சேரிப் பகுதியில் நிலவும் குரங்குத் தொல்லையைக் கட்டுப்படுத்த ஏற்கனவேவாயுத்துப்பாக்கிவிநியோகிக்கப்பட்டுள்ளது. கூடுதலான நிதியொதுக்கீட்டின் கீழ் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (அ-ம-125)

## மோசமான...

மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்தமையால் நேற்றுமுதல் நாடு முழுவதும் சீரற்ற வானிலை நிலவுகிறது. கடுமையான வானிலை காரணமாக ஒன்பது மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. மரங்கள் முறிந்து வீழ்ந்தும் இடிபாடுகள் ஏற்பட்டும் மூன்று வீடுகள் முற்றிலுமாக அழிந்துள்ளன. மேலும் 365 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளாக உள்ளன. பலத்த காற்றுக் காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளமையால பல முக்கியமான பாதைகளில் வாகனப் போக்குவரத்து முடங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தவறான...

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனைகளைத் தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நெல்லியடிப் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66)

## புல்லுக்குளம்...

பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார நிலையத்துக்கு அருகாக உள்ள வீதி நீண்டகாலமாக மூடப்பட்டுள்ளது. இந்த வீதியை மூடுமாறு அதிகாரமளித்தது யார்? குறித்த கட்டுமானப் பணிகளுக்காகவே, வீதி மூடப்பட்டது. ஆனால், கட்டுமானப் பணிகள் முடிவடைந்த பின்னர் தற்போதும் அந்த வீதியை மூடி வைத்திருப்பதன் அவசியம் என்ன? முன்பு பாடசாலை மாணவர்கள் மிக இலகுவாக பேருந்து நிலையத்துக்குச் செல்லக்கூடியவகையில் அந்த வீதி பயன்பட்டது. இப்போது வீதியை மூடி வைத்து மாணவர்களை அலைக்கழிக்கின்றீர்கள் - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிரதிநிதி, 'யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார நிலையம் இன்னமும் எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை. அது ஒப்படைத்த பின்னர் அந்த வீதியைத் திறந்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படும்' - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார நிலையம் திறந்துவைக்கப்படுகின்றமைக்கும் வீதியைத் திறந்துவிடுகின்றமைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எனவே, அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம-26-125)

## தெல்லிப்பழை...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெல்லிப்பழை மருத்துவமனையின் புற்றுநோய்ப் பிரிவு வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் விசேட தனிப்பிரிவாக தரமுயர்த்தப்படவேண்டும். நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் நிதியொதுக்கீட்டைப்போன்று தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவுக்கும் கூடுதலான நிதியொதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டும்.

கடந்த 20 வருடங்களாக நாங்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துவருகின்றோம். ஆனால், தரமுயர்த்தப்படவுமில்லை, விசேட நிதியொதுக்கீடுகள் வழங்கப்படவில்லை. குறைவான நிதியொதுக்கீடுகளை மேற்கொண்டால், ஒரு கட்டத்தில் நாமாக முன்வந்து அதை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஒப்படைத்துவிடுவோம் என்பதே அவர்களின் (மத்திய அரசாங்கத்தின்) நோக்கமாகக் காணப்படுகின்றது - என்றார்.

இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, இந்த விடயம் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செல்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது. தனிப்பிரிவாக மாற்றுமாறு வலியுறுத்தி நாங்கள் அனைவரும் இணைந்து குரல் கொடுப்போம் - என்றார். (அ-ம-125)

## 3 சத்திர...

அபிசிறி என்ற பெண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி அந்தக் குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு வயிற்றில் கட்டி இருப்பதாக தெரிவிக்கப்பட்டு மே மாதம் ஏழாம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மூன்று தடவை அறுவைச் சிகிச்சைக்கு உட்பட்டுள்ளது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அந்தக் குழந்தை உயிரிழந்துள்ளது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை மானிப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினார்கள்.

உடற்கூற்றுப் பரிசோதனையில் பித்தப்பையில் கிருமித்தொற்று ஏற்பட்டு உயிரிழப்பு சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ம-26-100)

## ஆட்சிக்கு...

உள்ளூராட்சித் தேர்தலில் ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் இடையில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. தமிழரசுக் கட்சியின் சார்பில் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் எமக்கு கொள்கை ரீதியில் இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை. ஆனால், ஆட்சியமைப்பதில் நாங்கள் பொதுவான சில உடன்பாடுகளுக்கு வந்துள்ளோம். இதன்படி, ஓர் உள்ளாட்சி சபையில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கட்சி தவிசாளர் பதவிக்குப் போட்டியிடுவது என்றும், மற்றைய கட்சி அந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுபோல் இரண்டாவது அதிக ஆசனங் களைப் பெற்றுள்ள கட்சி துணைத் தவிசாளர் பதவிக்கு போட்டியிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

உள்ளாட்சித் தேர்தலில் ஆட்சியமைப்பதற்குப் பேரவையுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் தெரிவித்தார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச இசை விருது விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 31
கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2025 ஆம் ஆண்டுக்கான அரச இசை விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
கடந்த 2021 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளியிடப்பட்ட ஆக்கங்களை போட்டிக்கு சமர்ப்பிக்கமுடியும். போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை தத்தமது பிரதேச செயலக கலாசார அலகில் பெற்று பூர்த்திசெய்து ஆவணங்களுடன் கலாசார அலுவல்கள் திணைக்களம், 8 ஆவது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (ச-25,9)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

- பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோயில் முன், வீதி 150m தூரத்தில்
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம் செம்மண் காணி
- குடியிருப்புக்கள் சூழவுள்ள காணி

ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே
பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு - 076 739 0413
077 623 4204

AMMAMMA FOOD RESTAURANT
## வேலைவாய்ப்பு

**கொத்து ரொட்டி மாஸ்டர்**
(Kottu rotty Master) ஆண்கள் மட்டும்.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**சமையலாளர்** (Cook)
ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது.
யாழ்ப்பாண முறையில் சமைக்க தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

**வெயிட்டர்** (Waiter)
ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**காசாளர்** (Cashier)
ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது.
அடிப்படை கணனி அறிவு இருத்தல் வேண்டும்.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
AMMAMMA FOOD RESTAURANT - 077 666 0552

## பராமரிப்பாளர் தேவை

நுணாவில் சந்திக்கு அருகாமையில் வீட்டையும் காணியையும் பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை தங்குமிட வசதியும் உண்டு (இருவர் கொண்ட குடும்பம் விரும்பத்தக்கது) சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 076 201 3654

## கோழி வளர்ப்போருக்கு

இத்தாலியில் (Italy) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கோழி குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (Egg Incubator)
ஒரே நேரத்தில் 49 கோழி முட்டைகளை அடைகாக்கும் அரை தானியங்கி இயந்திரம் இப்பொழுது எம்மிடம். அத்துடன் விரும்பிய பறவைகளின் முட்டைகளையும் பயன்படுத்தலாம். இது ஒரு இத்தாலி (Italy) நாட்டின் தயாரிப்பு
"நாங்கள் உங்களோடு"



ஆர்க் .என். கம்பனி
- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803


# மஹோற்சவம்

மயிலணிச் சிவன் என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணித் திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாதசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறவுள்ளது.
எதிர்வரும் ஜீன் மாதம் 4ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.30மணியளவில் மஞ்சத் திருவிழாவும், 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30மணியளவில் சப்பறத் திருவிழாவும், 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் தேர்த்திருவிழாவும், மறுநாள் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணியளவில் தீர்த்தத்திருவிழாவும், அன்றைய தினம் மாலை 6.30மணியளவில் கொடியிறக்க உற்சவமும் நடைபெறுமென ஆலய ஆதீனக் கர்த்தாக்கள் தெரிவித்துள்ளனர். (ச-41-66)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
16 . 03 . 1936

மறைவு
01 . 05 . 2025

**அமரர் பரமேஸ்வரி சோமசேகரம்**
**(பொன்கிளி)**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் அம்மா
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் அம்மா
மண்விட்டு மறைந்து
நீங்கள் விண்நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாது அம்மா
உங்கள் நினைவுகள்

புதுவீதி
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(CS 3262) E-I

உச்சிப் பிள்ளையார் துணை

## தென்னிந்திய யாத்திரை

நாட்கள் : 12 ஆரம்பம் : 18.06.2025

**தரிசிக்கும் ஆலயங்கள் :** உச்சிப்பிள்ளையார் மணக்குள விநாயகர், பிள்ளையார்பட்டி விநாயகர், நவக்கிரக கோயில்கள், சந்திரன், சுக்கிரன், சூரியன், புதன், வியாழன், செவ்வாய், ராகு, கேது, சனீஸ்வரன், திருச்செந்தூர், பழனி, திருத்தணி, பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், சுவாமிமலை, மதுரை மீனாட்சி, இராமேஸ்வரம், சமயபுரம், திருக்கடையூர் அபிராமி, திருப்பதி, ஸ்ரீரங்கம், சாரங்கபானி, ஆதி கும்பேஸ்வரர், திருவெண்ணாமலை, சிதம்பரம், திருவானைக்காவல், திருக்கானஸ்திரி, ஏகாம்பரேஸ்வரர், சீர்காழி, வடபழனி முருகன், பஞ்சவடி ஆஞ்சநேயர், கபாலீஸ்வரர், மேல்மருவத்தூர், (மரீனா பீச்) 45 ற்கு மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

## வட இந்திய யாத்திரை

பத்திரிநாத் தோரநாத் யாத்திரை இமயமலைப் பயணம்

**தரிசிக்கும் இடங்கள் :** ஹரித்துவார், ரிசிகேஷ், கங்கோத்திரி, யமுனோத்திரி, உத்திரகாசி, ஸ்ரீரிநாத்,கேதாரநாத், சரஸ்வதி நதி உற்பத்தியாகும் இடம்,இந்திய - சீனா எல்லை

நாட்கள் : 12 ஆரம்பம் : 10.07.2025
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

## வட இந்திய யாத்திரை

காசி அயோத்தி சீரடி பாபா யாத்திரை
நாட்கள் : 10 ஆரம்பம் : 10.08.2025

**தரிசிக்கும் ஆலயங்கள் :** இராமர் கோயில், திருவேணி சங்கமம், காலபைரவர், கங்கா பூஜை, காசியில் 3 நாட்கள், சீரடி பாபா, சனி சிங்னாப்பூர், இராமேஸ்வரம், மதுரை மீனாட்சி, உத்திரகோசமங்கை, திருபுராணி, சென்னையில் ஒரு நாள் சொப்பிங். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

குறிப்பு : எங்களுக்கு வேறு கிளைகள் இல்லை.

**ஸ்ரீரங்கநாதன் மகன் ராஜன்**
**59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11**
**077 768 0102, 077 736 2154**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.